செ.வெ.எண்: 298 நாள்: 04.05.2020

**ஊரடங்கு தளர்வுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில் வணிகர் சங்க பிரதிநிதிகள் மற்றும் வணிகர்களுடன் இன்று (04.05.2020) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது**

தஞ்சாவூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரடங்கு தளர்வுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இஆப., அவர்கள் தலைமையில் வணிகர் சங்க பிரதிநிதிகள் மற்றும் வணிகர்களுடன் இன்று (04.05.2020) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது :-

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, 17.05.2020 நள்ளிரவு 12 மணி வரை ஊரடங்கு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி ஊரடங்கு உத்தரவு கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் தற்போதுள்ள நடைமுறைகளில் எவ்வித தளர்வுமின்றி தொடர்ந்து முழுமையாக கடைபிடிக்கப்படும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக 25.03.2020 முதல் ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்து வருகிறது. தமிழக அரசின் உத்தரவின்படி ஊரடங்கு உத்தரவானது 04.05.2020 முதல் 17.05.2020 நள்ளிரவு 12.00 மணி வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் தற்போதுள்ள நடைமுறைகளின்படி எவ்விதமான தளர்வுகளுமின்றி ஊரடங்கு முழுமையாக கடைபிடிக்கப்படும்.

பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுத்தலங்களில் பொதுமக்கள் வழிபாடு மற்றும் அனைத்து மதம் சார்ந்த கூட்டங்கள், திரையரங்குகள், கேளிக்கை கூடங்கள், மதுக்கூடங்கள், உடற்பயிற்சி கூடங்கள், கடற்கரை, சுற்றுலாத்தலங்கள், உயிரியல் பூங்காக்கள், அருங்காட்சியகங்கள், நீச்சல் குளங்கள், விளையாட்டு அரங்குகள், கூட்ட அரங்குகள் போன்ற இடங்கள். அனைத்து வகையான சமய, சமுதாய, அரசியல், விளையாட்டு, பொழுதுபோக்கு, கல்வி, கலாச்சார நிகழ்வுகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள். பொதுமக்களுக்கான விமான, இரயில், பொது போக்குவரத்து, டாக்ஸி, ஆட்டோ, மாநிலங்களுக்கு இடையேயான பேருந்து போக்குவரத்து, மாநிலங்களுக்கு இடையேயான பொதுமக்கள் போக்குவரத்து, தங்கும் விடுதிகள்

(பணியாளர்கள் விடுதிகள் தவிர) தங்கும் ஹோட்டல்கள், ரிசார்ட்டுகள் ஆகியவற்றின் செயல்பாடுகளுக்கான தடைகள் மறு உத்தரவு வரும் வரை தொடர்ந்து அமலில் இருக்கும். இறுதி ஊர்வலங்களில் 20 நபர்களுக்கு மேல் பங்கேற்கக்கூடாது. திருமண நிகழ்ச்சிகளுக்கு தற்போதுள்ள நடைமுறைகள் தொடரும்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளை தவிர்த்து இதர பகுதிகளில் கட்டுமானப்பணிகள் நடைபெறும் இடத்தில் கட்டுமானத் தொழிலாளர்கள் இருக்கும்பட்சத்தில் கட்டுமானப்பணிகள் அனுமதிக்கப்படும். அனைத்து அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் கட்டுமானப்பணிகள் மற்றும் சாலைப்பணிகள் அனுமதிக்கப்படும்.

பிளம்பர், எலக்டிரீசியன், ஏ.சி மெக்கானிக், தச்சர் உள்ளிட்ட சுய திறன் பணியாளர்கள், வீட்டு வேலைப்பணியாளர்கள், சிறப்பு தேவைகள் உள்ளோருக்கான உதவியாளர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் உரிய அனுமதி பெற்று பணிபுரியலாம். அனைத்து அச்சகங்களும் (Printing Press) இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உணவகங்களில் காலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை பார்சல் மட்டும் வழங்க அனுமதிக்கப்படும். (டீ கடைகள் தவிர்த்து) அனைத்து தனிக்கடைகள், ஹார்டுவேர், சிமெண்ட், கட்டுமானப்பொருட்கள், சானிட்டரிவேர், மின்சாதனப் பொருட்கள் விற்பனை செய்யும் தனிக்கடைகள் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை ஊரகப்பகுதிகளிலும், நகரப்பகுதிகளான மாநகராட்சி, நகராட்சி ஆகிய பகுதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரையிலும், மொபைல்போன் விற்பனை மற்றும் பழுது நீக்கும் கடைகள், கணிப்பொறி, வீட்டு உபயோகப்பொருட்கள், மின் மோட்டார், கண் கண்ணாடி கடைகள் உள்ளிட்ட தனிக்கடைகள் (பெரிய வணிக நிறுவனங்கள்(மால்), குளிர்சாதன வசதியுடன் கூடிய பெரிய கடைகள், முடி திருத்தும் மற்றும் அழகு கலை கடைகள் தவிர்த்து) காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும். இ-காமர்ஸ் வாயிலாக உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் சப்ளை செய்யும் நிறுவனங்கள் தற்போதுள்ள நடைமுறையே பின்பற்றப்பட வேண்டும்.

ஏற்கனவே அரசால் அனுமதிக்கப்பட்ட அனைத்து தளர்வுகளும் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ள வேளாண்மை பணிகள், வேளாண் சார்ந்த தொழில்கள் (Agri Processing) தொழில் மற்றும் வணிக செயல்பாடுகளும், மருத்துவப்பணிகள் மற்றும் அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் துறைகள், வங்கிகள், அம்மா

உணவகங்கள். ஏ.டி.எம். மற்றும் ஆதரவற்ற இல்லங்கள் ஆகியவை எவ்வித தங்கு தடையுமின்றி முழுமையாக செயல்படலாம். அனைத்து இடங்களிலும் சமூக இடைவெளி விட்டு நிற்க வேண்டும். கிருமி நாசினி மருந்துகளைக் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் பாதுகாப்பாக பணிபுரிவதை உறுதி செய்ய வேண்டும். ஊரடங்கு உத்தரவு தொடர்வதால், பொது இடங்களில் 5 நபர்களுக்கு மேல் கூடக்கூடாது. மேலும் அரசின் உத்தரவுகளை தீவிரமாக கடைபிடிக்க வேண்டும்.

கனிமம் மற்றும் சுரங்கப்பணிகள், கட்டுமானப்பணிகளுக்கு தேவையான பொருட்களை வழங்கும் செங்கல் சூளைகள், கல்குவாரிகள், எம்சாண்ட், கிரஷர்கள் மற்றும் இவற்றிற்கான போக்குவரத்து ஆகியன செயல்படலாம்.

பேருராட்சி மற்றும் கிராமப்புற பகுதிகளில் செயல்படும் தொழிற்சாலைகள் கட்டுமானப் பணிகளைத் தொடங்க பணியாளர்கள் மற்றும் வாகனங்களுக்கு அனுமதி சீட்டுகள் பெற வேண்டும். நிறுவனங்கள் தங்கள் பணியாளர்களை நிறுவனத்தின் பிரத்யேக பேருந்துகள், வேன்கள் மூலம் அழைத்து வரவேண்டும். அந்த வாகனங்களில் 50 சதவீத அளவிற்கு மட்டுமே தக்க தனி நபர் இடைவெளியைக் கடைபிடித்து ஊழியர்களை அழைத்து வர வேண்டும்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கிராமப்புற தொழில்கள், தனிக்கடைகள் ஆகியவை செயல்பட தனி அனுமதி தேவையில்லை. மத்திய அரசு மற்றும் மாநில அரசு அலுவலகங்கள் 33 சதவீத பணியாளர்களுடன் தொடர்ந்து செயல்படலாம். (பதிவுத்துறை அலுவலகங்கள் உட்பட). மேலும், சமூக இடைவெளியை கடைபிடிக்காத வணிக நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு சீல் வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அரசு வழங்கியுள்ள இந்த நடைமுறைகளைப் பின்பற்றி தொழிற்சாலைகளுக்கு தக்க அனுமதி வழங்கி 06.05.2020 முதல் செயல்பட அனுமதிக்கப்படும். கொரோனா வைரஸ் நோய் தொற்றின் தாக்கத்தை கட்டுப்படுத்த அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஆதரவையும். ஒத்துழைப்பையும் நல்குமாறு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திரு.ம.கோவிந்த ராவ், இ.ஆ.ப அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தஞ்சாவூர் மாவட்டத்தில் இதுவரை 58 பேருக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டு தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் இதுவரை 43 நபர்கள் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். மீதமுள்ள 15 நபர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. 10 கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு எந்த ஒரு தளர்வும் கிடையாது. அந்தப் பகுதிகளில் எந்த ஒரு வாகன போக்குவரத்திற்கும் அனுமதி கிடையாது. கட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் அவர்களின் வீட்டிற்கே நேரடியாக சென்று வழங்கப்படும். கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் தொடர்ந்து தீவிரமாக கண்காணிக்கப்படும்.

தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணையின்படி தஞ்சாவூர் மாவட்டத்தில் மே 17ஆம் தேதி வரை ஊரடங்கு உத்தரவு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவில் கொடுக்கப்பட்டுள்ள தளர்வுகள் குறித்து வணிக அமைப்பினருடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டு எடுத்துரைக்கப்பட்டது. அரசால் அறிவிக்கப்பட்டுள்ள தளர்வுகளின்படி, கடைகள் நடத்துவதாக அவர்கள் உறுதி அளித்துள்ளனர். தொடர்ந்து நமது மாவட்டத்தில் விதிகளை கடைபிடிப்பதன் மூலம் கொரோனா பரவாமல் கட்டுப்படுத்த முடியும். பொதுமக்கள் வணிகர்கள் நோய் பரவாமல் இருப்பதற்கு சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். அத்தியாவசிய வேலைகள் தவிர மற்ற வேலைகளுக்கு வெளியே வருவதை தவிர்க்க வேண்டும்.

கட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் தொடர்ந்து 28 நாட்கள் புதிய தொற்று கண்டறியாமல் இருந்தால் அந்தப் பகுதி கட்டுப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து தளர்வு கொடுக்க வாய்ப்புள்ளது. அதற்கு அந்த பகுதி மக்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்து வருவதுபோல் தொடர்ந்து வழங்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்தில் 10 இடங்கள் கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவைகளில் அதிராம்பட்டினம், திருவையாறு பேரூராட்சி, பாபநாசம் பேரூராட்சி, கும்பகோணம் நகராட்சி, ஒரத்தநாடு நெய்வாசல் ஊராட்சி, தஞ்சாவூர் மாநகராட்சிக்குட்பட்ட கே.எம்.எஸ் நகர், வல்லம் பேரூராட்சி, பேராவூரணி, பாபநாசம் திருவைகாவூர் ஆகிய பகுதிகளில் நோய்த்தொற்று

உள்ளோரின் வீட்டிலிருந்து அதை சுற்றியுள்ள ஐந்து கிலோமீட்டர் மற்றும் மேலும் இரண்டு கிலோமீட்டர் பகுதி கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக பார்க்கப்படுகிறது.

அந்தப் பகுதிகளில் மே 17 வரை தற்போது உள்ள நிலையே தொடரும். எந்த ஒரு தளர்வும் கிடையாது.

நமது மாவட்டத்திற்கு எட்டு வழிகளாக பிற மாவட்டங்களில் இருந்து வருவதை கண்காணித்திட 8 செக் போஸ்ட்கள் அமைக்கப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து அதிகமாக வாகனங்கள் வரும் நான்கு பகுதிகளான நீலத்தநல்லூர், புதுக்குடி, விளாங்குடி, அணைக்கரை ஆகிய பகுதிகளில் 24 மணி நேரமும் காவல் துறை, சுகாதாரத் துறை, வருவாய்த்துறை ஆகியோர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது. இதுவரை சென்னையிலிருந்து 280 பேர் வந்துள்ளனர். தவிர மற்ற மாநிலம் மற்றும் மாவட்டத்தில் இருந்து வருபவர்களும் கண்காணித்து அவர்களின் தொலைபேசி எண் முகவரி ஆகியவை வாங்கப்பட்டு அவர்கள் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். அவர்களுக்கு பரிசோதனை மாதிரிகள் எடுக்கப்படுகிறது. பிற மாவட்டங்களிலிருந்து கட்டுப்படுத்தப்பட்ட பகுதியிலிருந்து வரக்கூடியவர்கள் பெரியார் மணியம்மை கல்லூரியில் ஒரு தனிமைப்படுத்தப்பட்ட பகுதியை உருவாக்கி அவர்களை அங்கு வைத்து கண்காணித்து, அவர்களுக்கு அங்கேயே ஸ்வாப் டெஸ்ட் எடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் முடிவு வரும்வரை அங்கேயே தனிமைப்படுத்தி வைக்கப்படுவார்கள். இதுவரை சென்னையிலிருந்து வந்தவர்களில் 280 பேரில் ஒருவருக்கு கொரோனா நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 143 பேரின் முடிவுகளில் அறிகுறிகள் எதுவும் இல்லை என தெரிய வந்துள்ளது. 136 பேருக்கு முடிவுகள் வர வேண்டியுள்ளது. பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோருக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கேட்டுக் கொள்வது என்னவென்றால் சென்னையிலிருந்து யாராவது உங்கள் பகுதிக்கு வந்து இருந்தால், அதை உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். சோதனைச் சாவடிகளில் முழு கண்காணிப்பில் இருந்தாலும் ஒரு சில மாற்று பாதைகளில் நடந்து வருகின்றனர். எனவே பொதுமக்கள் தங்கள் பகுதிக்கு யாராவது சென்னை மற்றும் இதர பகுதிகளில் குறிப்பாக மகாராஷ்டிராவில் இருந்து வந்திருந்தால் அவர்கள் குறித்து கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண் 1077 என்ற எண்ணில் தகவல் தெரிவிக்க வேண்டும். மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அவர்களுக்கு

ஸ்வாப் டெஸ்ட் எடுக்கப்படும். இது நோயை கட்டுப்படுத்துவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

பெரியார் மணியம்மை கல்லூரியில் இதுவரை 19 நபர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிப்பில் உள்ளனர். அவர்களின் மாதிரிகள் மருத்துவ பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டால், அவர்கள் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்படுவர். நோய் தொற்று இல்லையென கண்டறியப்பட்டால், அவர்கள் வீட்டிலேயே 14 நாட்கள் தங்களை தாங்களே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முத்திரை வைக்கப்பட்டு, மஞ்சள் அடையாள வில்லைகள் கைகளில் பொருத்தப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் தற்போது சிவப்பு மண்டலத்தில் உள்ளது. தொடர்ந்து, 21 நாட்கள் புதிதாக கொரோனா பாதிப்பு ஏற்படாத பட்சத்தில், சிவப்பு மண்டலத்தில் இருந்து ஆரஞ்சு மண்டலத்திற்கு மாறமுடியும். தஞ்சாவூர் மாவட்டத்தில் பத்திரிக்கையாளர்களுக்கு எடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இதுவரை கொரோனா நோய்த்தொற்று இல்லையென கண்டறியப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.